# உச்சநீதிமன்றத் தீர்ப்பின் சாரம்! முதல் பக்கத் தொடர்ச்சி...



● மசோதாக்கள் மீது ஆளுநர் முடிவெடுக்காமல், 'முழுமையான வீட்டோ' அல்லது 'பாக்கெட் வீட்டோ' என்ற தனி அதிகாரத்தைச் செயல்படுத்தலாம் என்ற கருத்தை ஏற்க முடியாது. அரசமைப்பின் 201-ஆவது பிரிவின் கீழ் குடியரசுத் தலைவர் தனது கட மையை நிறைவேற்றுவதற்கு அவருக்கு 'பாக்கெட் வீட்டோ' அல்லது 'முழுமையான வீட்டோ' என எதுவும் வழங்கப்படவில்லை.

● மசோதாவுக்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது அல்லது நிறுத்தி வைக்கப்படுகிறது ஆகிய இரு தேர்வுகளில் ஒன்றை மட்டுமே குடியரசுத் தலைவர் தேர்வு செய்வதை அரசமைப்பின் 201-ஆவது பிரிவு கட்டாயமாக்குகிறது.

● அரசமைப்பின் 142 -ஆவது பிரிவின்படி, உச்சநீதிமன்றம் அதன் அதிகாரத்தைப் பயன்படுத்தி, தமிழக ஆளுநருக்கு மீண்டும் அனுப்பி வைக்கப்பட்ட மசோதாக்கள் ஒப்புதல் பெறப்பட்டவையாகக் கருதும் தகுதி பெறுகின்றன எனத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

● மாநில அமைச்சரவையின் உதவி மற்றும் ஆலோசனையின் பேரில், மசோதா மீது தனது ஒப்புதலை ஆளுநர் நிறுத்திவைத்தாலோ மசோதாவை குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு பரிந்துரைத்தாலோ அத்தகைய நடவடிக்கையை அவர் அதிகபட் சமாக ஒரு மாத காலத்துக்குள் எடுக்க வேண்டும்.

● மாநில அமைச்சரவையின் ஆலோசனைக்கு மாறாக ஆளுநர் ஒப்புதல் வழங்காவிட்டால், அது குறித்த தகவலுடன் மசோதாவை அவர் அதிகபட்சம் மூன்று மாதங்களுக்குள் திருப்பி அனுப்பவேண்டும். ஒருவேளை மாநில அமைச் சரவையின் ஆலோசனைக்கு மாறாக மசோதாவை குடியரசுத்

● தலைவருக்கு ஆளுநர் அனுப்புவதாக இருந்தால் அதை அவர் அதி கபட்சமாக மூன்று மாதங்களுக்குள் செய்ய வேண்டும். மசோதா மறுபரிசீலனைக்குப் பிறகு மீண்டும் ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட்டால் அதற்கு அவர் உடனடியாகவோ அதிகபட்சமாக ஒரு மாதத்துக்குள்ளாக ஒப்புதல் அளிக்க வேண்டும் என தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

● இந்த உத்தரவுகளின் மூலம் ஆளுநரின் அலுவலக அதிகாரங்களை நீதிமன்றம் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால், நாடாளுமன்ற ஜனநா யகத்துக்கும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கும் மதிப்பளித்து ஆளுநர் செயல்பட வேண்டும் என்று நீதிபதிகள் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளனர்.

**ஆளுநரின் செயல்: நீதிபதி விமர்சனம்!**

● இந்த வழக்குடன் தொடர்புடைய மசோதாக்கள் ஆளுநர் ரவியிடம் நீண்ட காலமாக நிலுவையில் இருந்த நிலையில், ஆளுநர் அவற்றை குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்பியதன் மூலம் அவர் தெளிவுடன் நேர்மையற்ற செயல் புரிந்துள்ளார் என நீதிபதி ஜே.பி.பார்திவாலா விமர்சித்துள்ளார்.

● மேலும், இதேபோன்ற மசோதா தாமத விவகாரத்தில் பஞ்சாப் அரசு அந்த மாநில ஆளுநருக்கு எதிராக தொடர்ந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்த உடனேயே, தமிழக ஆளுநர் ரவி இரண்டாவது முறையாக தனக்கு அனுப்பப்பட்ட மசோதாக்களை குடியரசுத் தலைவருக்கு பரிந்துரைத்துள்ளார். எனவே, அந்த மசோதாக்கள் அவரது மறுபரிசீலனைக்காக மாநில அரசால் சமர்ப்பிக்கப்பட்ட நாளில் இருந்தே அவை ஒப்புதல் அளிக்கப்பட்டவையாக தகுதி பெறுகின்றன என்று தீர்ப்பில் கூறியுள்ளார்.

**மசோதாவை மறுக்க மன்னருக்கே அதிகாரம் இல்லை!**

● உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் வெளிநாடுகளில் மசோதாவுக்கு எப்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது என்ற விவரத்தை பட்டியலிட்டுள்ளது. அதன்படி இங்கிலாந்தில் இரு சபை களும் மசோதா நிறைவேற்றிய பிறகு, அதற்கு மன்னர் ஒப்புதல் தர வேண்டும். கடந்த 1707-ம் ஆண்டு ராணி ஆன் என்பவர் ஒரு மசோதாவிற்கு மட்டும் ஒப்புதல் வழங்க மறுத்தார். அதன் பின் இன்று வரை எந்த மசோதாவுக்கும் மன்னர்கள் ஒப்புதல் தர மறுத்ததில்லை. அமெரிக்காவில் ஜனாதிபதி ஒப்புதல் மறுத்தால், இரு சபைகளும் 3-ல் 2 பங்கு பெரும்பான்மையுடன் மீண்டும் நிறைவேற்றி னால் மசோதா சட்டமாகிவிடும். பிரான்ஸ், ஜப்பான், இத்தாலி, ஜெர்மனி, சிங்கப்பூர், பாகிஸ்தான், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் ஜனாதிபதி ஒப்புதல் வழங்க காலக்கெடு உள்ளது. அயர்லாந்து நாட்டில் ஜனாதிபதி மசோதாவிற்கு ஒப்புதல் கொடுக்க மறுத்தால், அதனை உச்சநீதிமன்றத்திற்கு அனுப்பி விட வேண்டும்.

மேலும் நீதிபதிகள் தங்களது தீர்ப்பில் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அரசியலமைப்புச் சட்ட பேராசிரியர் நிக்கோலஸ் பார்பரின் கருத்துகளை மேற்கோள் காட்டி உள்ளனர்.

அதன் விவரம் வருமாறு:-

● ஒரு மன்னர் அல்லது ஜனாதிபதிக்கு சட்டங்களை மறுப்ப தற்கான அதிகாரத்தை வழங்குவது ஜனநாயகத்துக்கே எதிரானது. சுருக்கமாக சொன்னால், நாடாளுமன்றத்தில் முறையாக நிறைவேற்றப்பட்ட ஒரு மசோதா, மன்னரிடம் சமர்ப்பிக்கப்படும்போது, அதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும் என்பதே அவரது கடமை. இதில் தனிப்பட்ட விருப்பத்தேர்வுக்கோ, தீர்வுக்கோ இடமே இல்லை. மன்னர் மசோதாவிற்கு ஒப்புதலை மறுப்பது, அவர் அரசியலமைப்புக்கு முற்றிலும் எதிராக நடந்துகொள்ளுகிறார் என சொல்லப்பட வேண்டும்.

---

## அண்ணல் அம்பேத்கரின் சிந்தனை முத்துக்கள்!



● "என்னைவிட உயர்ந்தவன் இருக்கிறான் என்று தாழ்த்தப்பட்டவன் எண்ணிக் கொள்கிறான்; என்னைவிடத் தாழ்ந்தவன் இருக்கிறான் என்று உயர்ந்த நிலையில் உள்ளவன் எண்ணிக் கொள்கிறான்; இரண்டுமே நல்லதல்ல! உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதிஎன்றவார்த்தைகளைப் பயன்படுத்துவதே தவறு."

● **"சுயமரியாதையே மனிதனின் சிறந்த அடையாளம்! அதை இழந்து வாழ்வது மிகப் பெரிய அவமானம். சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்வது எளிதான காரியமல்ல. பல துன்பங்களை எதிர்கொள்ளும்படி இருக்கும்; கடினமாகவும் போராட வேண்டியிருக்கும்."**

● "இந்தச் சமூகம் தீண்டத்தகாதவர்களைத் தனக்குத் தேவையானபோது மட்டும் பயன்படுத்திக் கொண்டு மற்ற நேரங்களில் ஒதுக்கி வைத்துவிடுகிறது. செருப்பைப் போட்டிருப்பவன் வீட்டுக்கு வெளியிலேயே அதைவிட்டுவிட்டு உள்ளே சென்று விடுவதுபோல சமூகம் தீண்டத்தகாதவர்கள் என்று கூறி சிலரை மட்டும் தள்ளிவைத்துவிடுகிறது."

● "மதம், சமத்துவத்தை வளர்க்க வேண்டும். அடிமைத்தனத்தை அல்ல! தன்னைப் பின்பற்றுபவர்களையே கடையனாக்கித் தண்டிக்கிற அமைப்பு எப்படி மதமாக இருக்க முடியும்?"

● "நீங்கள் வளைந்து கொடுத்து வாழ முயற்சிப்பீர்கள். ஆனால் அது வாழ்க்கை ஆகாது! நாட்டுக்காகவும் நல்ல நோக்கத்துக்காகவும் சகலத்தையும் விட்டுவிடத் துணிவதே நல்ல வாழ்க்கையாகும். ஒதிய மரம் போல பயனற்றுப் பலகாலம் வாழ்வதா? ஒரு உன்னத லட்சியத்துக்காக இன்னுயிர் ஈவதா? எது நல்லது என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்!"

● **"வறுமை யாருக்கும் விதிக்கப்பட்டதில்லை! அது உடன் பிறந்ததோ, தீர்க்க முடியாததோ அல்ல! "இது விதி' என்றோ "இதுதான் விதி' என்றோ எண்ணிக் கொள்ளாதீர்கள்!**

● "பாகுபாடு, அதனால் எழும் வெறுப்பு, இனவெறி, தீண்டாமை, வன்முறை போன்றவற்றை எல்லாம் ஒழிக்கவல்ல மிகவும் சக்தி வாய்ந்த ஆயுதம் கல்வி"

● **"பெண்கள் அடைந்த முன்னேற்றத்தின் அளவைக் கொண்டு ஒரு சமூகத்தின் முன்னேற்றத்தை நான் அளவிடுகிறேன்."**

● "உங்களிடம் இரண்டு ரூபாய் இருந்தால், ஒரு ரூபாயை உணவுக்கும், ஒரு ரூபாயை புத்தகத்திற்கும் எடுத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் உணவு உங்களுக்கு வாழ உதவும், ஆனால் எப்படி வாழ வேண்டும் என்பதை புத்தகம் கற்றுக் கொடுக்கும்."

● "ஆகவே கல்வி என்பது நமது பிறப்புரிமை! உரிமைகள் பறிக்கப்படுவதும், மறுக்கப்படுவதும் தடுக்கப்பட வேண்டுமானால் நிச்சயம்.... கல்வி அனைவருக்கும் கிடைக்கப் பெற வேண்டும்! சமமாக கிடைக்கப் பெற வேண்டும்."

---

### அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணி

# இயல்பு கூட்டணி அல்ல; கேலிக் கூத்தான கூட்டணி!

## தினகரன் நாளிதழ் தலையங்கம்!

சென்னை,ஏப்.14-

தினகரன் நாளிதழ் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

அ.தி.மு.க.-பா.ஜ.க. கூட்டணி அதிகாரப்பூர்வமாக உறுதி செய்யப்பட்டுள்ளது. பா.ஜ.க. தலைவர் அமித்ஷா, இதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளார். அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியுடன் கை கோர்த்தபடி 'இது மிகவும் இயல்பான கூட்டணி. 1998ம் ஆண்டு முதல் அ.தி.மு.க.வும், பா.ஜ.க.வும் தொடர்ந்து கூட்டணி அமைத்து வருகிறது' என்று பெருமிதம் தெரிவித்துள்ளார்.

தேர்தலில் கூட்டணி அமைப்பது என்பது, ஒவ்வொரு கட்சிக்குமான தனிப்பட்ட முடிவு. ஆனால் கூட்டணி கணக்குகளை தொடர்ந்து கண்காணித்துக் கொண்டிருக்கும் மக்கள் மன்றத்தில், இவர்களின் 'இயல்பு' என்பது கேலிக்கூத்தாகவே மாறி நிற்கிறது. முதல்முறையாக அ.தி.மு.க.-பா.ஜ.க. கூட்டணி 1998ம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் உருவானது. அந்த தேர்தலில் பாஜ 24 கட்சிகளு டன் கூட்டணி அமைத்தது. அப்போது கிடைத்த வெற்றியில் வாஜ்பாய் பிரதமராக பொறுப்பேற்றார். இந்த ஆட்சிக்கான ஆதரவை திரும்ப பெற்று, கவிழ்வதற்கு காரணமாக இருந்தது அதிமுக.

அ.தி.மு.க. கூட்டணியின் போது 'பல இரவுகளை தூக்கமின்றி கழித்தேன்' என்று வாஜ்பாயும், என்னு டைய வாழ்நாளில் இனி ஒரு போதும் பா.ஜ.க.வுடன் கூட்டணி வைக்க மாட்டேன் என்று ஜெயலலிதாவும் கூறியது அன்றைய காலகட்டத்தில் பரபரப்பின் உச்சமானது. 2014 நாடாளுமன்றத் தேர்தலில் கூட 'லேடியா? மோடியா? என்று ஜெயலலிதா எழுப்பிய கேள்வி பா.ஜ.க.வை புறம் தள்ளியது. இப்படிப்பட்ட சூழலில் தான், 12 ஆண்டுகள் கழித்து, அதுவும் ஜெயலலிதா மறைவுக்கு பிறகு, அ.தி.மு.க.-பா.ஜ.க. கூட்டணி உருவானது. அதுவும் முதல்வர் பதவியை தக்கவைப்பதற்கான நிர்ப்பந்தம், எடப்பாடி பழனிசாமிக்கும், தமிழகத்தில் எப்படியாவது கால் ஊன்ற வேண்டும் என்ற ஆக்ரோஷம் பா.ஜ.க.விற்கும் இருந்ததால் மட்டுமே கூட்டணி தொடர்ந்தது.

2021ல் இந்த கூட்டணிக்கு கிடைத்த தோல்வி யும், பா.ஜ.க.வின் அடக்குமுறைகளும் ஒரு கட்டத்தில் கூட்டணியை முறிக்கும் அளவுக்கு, அ.தி.மு.க.வை கொண்டு சென்றது. இதற்கடுத்து இரு கட்சி நிர்வாகிகளும் நடத்திய சொற்போரும், விவாதங்களும் இன்னும் மக்களின் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் தான் 'இயல்பான கூட்டணி என்ற முகமூடியை இருவரும் அணிந்துள்ளனர். இவர்கள் கூட்டணி அமைத்தது தொடர்பான சர்ச்சைகள், மக்கள் மன்றத்தில் விவாதப் பொருளாகவும் மாறி நிற்கிறது.

ஆனால், இதற்கான பின்னணியை தனது அறிக்கையின் மூலம் வெளிச்சம் போட்டு காட்டியுள்ளார் தமிழக முதல்வர். 'இன்றைய அ.தி.மு.க. பொறுப்பாளர்களின் உறவினர்கள் குடும்பங்களை சுற்றி, மத்திய புலனாய்வுத்துறை இரண்டு சோதனைகள் நடத்தியது. அதிலிருந்து தப்பித்துக் கொள்ள பா.ஜ.க. தலைமையை நோக்கி ஓடினார்கள். அதையே நிபந்தனையாக வைத்து, கூட்டணியை உறுதி செய்ததையும் உணராதவர்கள் அல்ல தமிழ்நாட்டு மக்கள். அ.தி.மு.க.-பா.ஜ.க. கூட்டணியை உறுதி செய் ததே ஊழல் தான் என்பதை உணர்ந்தவர்கள் நமது மக்கள். இரண்டு ரெய்டு நடந்தவுடன், அ.தி.மு.க.வை அடமானம் வைத்தவர்கள், அடுத்து தமிழ்நாட்டை அடமானம் வைக்க துடிக்கிறார்கள்' என்று அம்பலமாக்கியுள்ளார்.

"தமிழ்நிலத்தில் தனது சதித்திட்டங்களை பா.ஜ.க. நிறைவேற்றப் பார்க்கிறது. தனியாக வந்தாலும், எவர் துணையோடு வந்தாலும், தமிழ்நாட்டு மக்கள் தக்க பாடம் புகட்ட காத்திருக்கிறார்கள். சுயமரியாதை இன்றி டில்லிக்கு மண்டியிட்டு தமிழ்நாட்டை அடகு வைக்க பார்க்கின்றனர். இந்ததுரோககூட்டத்திற்கு தமிழ்நாட்டு மக்கள் தக்க விடையளிப்பார்கள்" என்பதும் முதல்வரின் நம்பிக்கை. வரப்போகும் சட்டமன்றத் தேர்தலில் இந்த நம்பிக்கைக்கு தமிழக மக்கள் உயிரூட்டுவார்கள் என்பதும் நிதர்சனம்.

இவ்வாறு 'தினகரன்' நாளிதழ் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.






சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் சேலம், மரவனேரியில் ரூ.7.66 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுவரும் ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதியினை நேற்று(13.04.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, தாட்கோ செயற்பொறியாளர் நடராஜன், சேலம் வருவாய் வட்டாட்சியர் பார்த்தசாரதி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.